# உரிமைத் தொகை: ஒரு கோடி மகளிர் தேர்வு

முதல்வர் மு.க.ஸ்டாலின்



**சென்னை, செப். 11:** தமிழகத்தில் மகளிர் உரிமைத் தொகை பெற 1.06 கோடி பேர் தகுதி பெற்றுள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

பயனாளிகளுக்கு அவர்களது வங்கிக் கணக்கில் வரும் செப். 15 முதல் மாதந்தோறும் ரூ.1,000 வரவு வைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை' திட்டம் வரும் 15-ஆம் தேதி தொடங்கப்படுவதை யொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது முகாம் அலுவலகத்திலிருந்து காணொலி வழியாக அதிகாரிகளுடன் திங்கள்கிழமை ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.

அப்போது, அவர் பேசியதாவது: மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் தொடக்க விழா வரும் 15-ஆம் தேதி காஞ்சிபுரத்தில் நடைபெறவுள்ளது. அன்றைய தினமே அனைத்து மாவட்டத் தலைமையிடங்களிலும் அமைச்சர்கள் முன்னிலையில் திட்டம் தொடங்கப்படும்.

தமிழ்நாடு அரசின் மிகப்பெரிய திட்டம் என்றால் இதுதான். ஒரே நேரத்தில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட பெண்கள், ஆயிரம் ரூபாயை மாதந்தோறும் பெறப் போகிறார்கள். அதிகப்படியான நிதி ஒதுக்கீடும், கூடுதலான பயனாளிகளைக் கொண்ட திட்டமாகவும் இது அமைந்துள்ளது. இதை வெற்றிகரமாக நடத்திக் காட்டும் பொறுப்பும் கடமையும் அதிகாரிகளுக்கு உள்ளது.

சிறு தவறு நடந்துவிட்டால், அதனால் கெட்ட பெயர் கிடைக்கும் என்பதையும் மறந்துவிடக் கூடாது. எனவே, எந்த இடத்திலும், எந்தச் சூழலிலும் எந்தவொரு தனி நபருக்கும் சிறு தவறுகூட நடந்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும். தகுதி வாய்ந்த பெண்களுக்கு உரிமைத் தொகை அவர்களது வங்கிக் கணக்கில் வரும் செப். 15 முதல் மாதந்தோறும் வரவு வைக்கப்படும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளோம்.

**விரைவில் பற்று அட்டை:** மகளிர் உரிமைத் தொகை பெற தகுதி பெற்ற பயனாளிகளில் பற்று அட்டை (டெபிட் கார்டு) இல்லாதவர்களுக்கு முதல்கட்டமாக குறிப்பிட்ட எண்ணிக்கையிலும், பிறகு அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும். அதேசமயம், பற்று அட்டை வழங்கப்படுவதற்காக காத்திருக்காமல், தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவருக்கும் உரிமைத் தொகை அளிக்கப்படும். பயனாளிகளுக்கு பணத்தை எடுப்பதில் எந்தச் சிக்கலும் ஏற்படக் கூடாது. அதிலும் கவனமாக இருக்க வேண்டும்.

**1.06 கோடி பேர் தேர்வு:** மகளிர் உரிமைத் தொகை திட்டம் தொடங்கிவைக்கப்பட்டவுடன், பயனாளிகளின் கைப்பேசிக்கு குறுஞ்செய்தி அனுப்பி வைக்கப்படும். அதில், பணம் எடுப்பது தொடர்பாக ஏதேனும் பிரச்னைகள் இருந்தால் அதுகுறித்து தகவல் தெரிவிக்க வேண்டிய இலவச தொலைபேசி எண்ணும் சேர்க்கப்பட வேண்டும்.

இந்தத் திட்டத்தில் இணைவதற்காக 1.63 கோடி விண்ணப்பங்கள் அரசுக்கு வந்துள்ளன. இவர்களில் தகுதியுள்ளவர்களாக ஒரு கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**குறுஞ்செய்தி:** தேர்வு செய்யப்பட்ட 1.06 கோடி பேரை தவிர்த்து, மற்றவர்களின் விண்ணப்பங்கள் ஏற்கப்படாததன் காரணங்கள் குறுஞ்செய்தியாக அனுப்பப்படும். அப்படி அனுப்பினால் பெரும்பாலானவர்கள் மனநிறைவு அடைவர். பணம் கிடைக்காத மகளிர் யாராவது கேட்டால், அவர்களுக்கு உரிய பதில்களை தனியாக அலுவலர்களை அமர்த்தி கூற வேண்டும்.

மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை மாவட்ட ஆட்சியர்கள் அனைவரும் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். இதற்கான அறிவுறுத்தல்களை அளிக்க வேண்டும். அரசு, வங்கிகள் மற்றும் பொதுமக்களுக்கான தொடர்பு சீராக அமைந்து வருகிறதா என்பதை மாதந்தோறும் கண்காணிக்க வேண்டும். மாதத்தில் முதல் ஒருவார காலம் இந்தத் திட்டத்துக்காக தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

**ஆண்டுக்கு ரூ.12,000 கோடி:** ஆண்டுக்கு ரூ.12,000 கோடி ஒதுக்கீட்டில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட மகளிர் மாதந்தோறும் பயனடையும் மாபெரும் திட்டம் மகளிர் உரிமைத் தொகை திட்டமாகும்.

எந்தவொரு திட்டமாக இருந்தாலும், அதை முறையாகச் செயல்படுத்தினால், அதனால் பயனடைந்தவர்கள் அரசைப் பாராட்டுவார்கள். அத்தகைய பாராட்டுகளை பெற்றுத் தரும் திட்டமாக கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தைச் செயல்படுத்திக் காட்ட வேண்டும் என்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

இந்தக் கூட்டத்தில் தலைமைச் செயலர் சிவ்தாஸ்மீனா, முதல்வரின் கூடுதல் தலைமைச் செயலர் என்.முருகானந்தம், நிதித் துறை முதன்மைச் செயலர் த.உதயச்சந்திரன், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைச் செயலர் தாரேஸ் அகமது, மகளிர் உரிமைத் தொகை திட்ட சிறப்புப் பணி அலுவலர் க.இளம்பகவத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# இந்தியா–சவூதி இடையே 8 ஒப்பந்தங்கள் கையொப்பம்

**முதலீடு, எரிசக்தி, தொழில்நுட்ப துறைகளில் ஒத்துழைப்பு**



இந்தியா–சவூதி அரேபியா இடையே ஒப்பந்தங்கள் கையொப்பமான நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி, சவூதி அரேபிய பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான்.

**புது தில்லி, செப். 11:** முதலீடு, எரிசக்தி, தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை விரிவாக்குவது தொடர்பாக இந்தியா மற்றும் சவூதி அரேபியா இடையே 8 ஒப்பந்தங்கள் திங்கள்கிழமை கையொப்பமாகின.

பிரதமர் நரேந்திர மோடி மற்றும் சவூதி அரேபிய பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் முன்னிலையில் இந்த ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.

தில்லியில் கடந்த 9, 10-ஆம் தேதிகளில் ஜி20 உச்சி மாநாடு நடைபெற்றது. இக்கூட்டமைப்பில் சவூதி அரேபியா அங்கம் வகிக்கும் நிலையில், தில்லி உச்சி மாநாட்டில் முகமது பின் சல்மான் பின் அப்துல் அஜீஸ் அல் சௌத் கலந்துகொண்டார்.

இந்நிலையில், இந்தியா–சவூதி அரேபியா இடையிலான வியூக கூட்டாண்மை கவுன்சிலின் முதல் கூட்டம் தில்லியில் திங்கள்கிழமை நடைபெற்றது.

பிரதமர் மோடி, முகமது பின் சல்மான் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், இரு நாடுகளுக்கும் இடையிலான கச்சா எண்ணெய், எரிவாயு சார்ந்த தற்போதைய கூட்டுறவை மேலும் விரிவாக்க ஒப்புக்கொள்ளப்பட்டது.

அத்துடன், மகாராஷ்டிரத்தில் 50 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பீட்டில் (சுமார் ரூ.4 லட்சம் கோடி) செயல்படுத்தப்படும் மேற்கு கடற்கரை எண்ணெய் சுத்திகரிப்பு திட்டப்பணிகளை விரைவுபடுத்தவும் முடிவு செய்யப்பட்டது.

எண்மயமாக்கல், முதலீடு உள்பட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிக்க இரு நாடுகளுக்கும் இடையே 8 ஒப்பந்தங்கள் கையொப்பமாகின என்று இந்திய வெளியுறவு அமைச்சக (அயலக இந்திய விவகாரங்கள்) செயலர் ஔசப் சயீத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது: சவூதி அரேபிய எண்ணெய் நிறுவனம், அபுதாபி தேசிய எண்ணெய் நிறுவனம் மற்றும் இந்திய நிறுவனங்களின் முத்தரப்பு ஒத்துழைப்பிலான மேற்கு கடற்கரை எண்ணெய் சுத்திகரிப்பு திட்டத்தை விரைவுபடுத்த இருதரப்பிலும் முழு ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

எரிசக்தி, பாதுகாப்பு, கல்வி, தொழில்நுட்பம், போக்குவரத்து, சுகாதாரம், சுற்றுலா, கலாசாரம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மின்சாரம், எரிவாயு, கண்ணாடி இழை கட்டமைப்பு திட்டங்களில் ஒத்துழைப்பது குறித்து இரு தலைவர்களும் விரிவாக ஆலோசித்தனர்.

**கூட்டுப் பணிக் குழு:** சவூதி அரேபிய தரப்பில் உறுதியளிக்கப்பட்ட 100 பில்லியன் அமெரிக்க டாலர்கள் (சுமார் ரூ.8.2 லட்சம் கோடி) முதலீடுகளை நிர்வகிப்பதில் உதவ கூட்டுப் பணிக் குழுவை அமைக்க இருதரப்பும் முடிவு செய்துள்ளன. இதில் பாதியளவு முதலீடு மேற்கு கடற்கரை எண்ணெய் சுத்திகரிப்பு திட்டத்துக்கானதாகும். இத்திட்டப் பணிகளைக் கண்காணிக்க ஒரு குழுவை அமைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது என்றார் அவர்.

பல்வேறு முக்கியத் துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை அதிகரிக்கும் நோக்கில், கடந்த 2019-ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட இந்தியா–சவூதி அரேபியா வியூக கூட்டாண்மை கவுன்சிலின் முதல் கூட்டம் தற்போது நடைபெற்றுள்ளது.

முன்னதாக, சவூதி அரேபிய பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானுக்கு குடியரசுத் தலைவர் மாளிகையில் அரசு சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அப்போது பேசிய முகமது பின் சல்மான், 'ஜி20 மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியதற்காக இந்தியாவுக்கு பாராட்டு தெரிவித்துக் கொள்கிறேன்' என்றார்.

# பணிக்கேற்ற மொழிப் பயன்பாடு

**முனைவர் என். மாதவன்**

மொழி என்பது நமது கருத்துகளை அடுத்தவர்களோடு பரிமாறிக் கொள்ள உதவும் ஊடகம். மொழி ஆற்றும் சேவையை வேறு சில வகைகளிலும் பெற இயலும். குழந்தைகள் தமது அழுகையின் மூலம் தமது தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றனர். மொழிகளில் எழுத்து மொழி, பேச்சுமொழி என்று இரண்டு வகை உண்டு. அனைத்து இடங்களிலும் மொழியின் பயன்பாடு ஒரே மாதிரியாய் இருப்பதில்லை. இணைய உலகில் மொழிப்பயன்பாடு சிக்கனமானதாகவும் நெகிழ்வானதாகவும் மாறிவருகிறது.

மொழி ஆற்றும் சேவைகளில் தகவல் பரிமாற்றம் மிகவும் முக்கியமானது. அறிமுகமான நபர்களுக்கிடையே மிகக்குறைவான வார்த்தைகளில் கூட பரிமாற்றம் நிகழ்ந்து விடுகிறது. சில நேரங்களில் சைகைகளில் கூட பரிமாற்றம் நடைபெற்று முடிந்துவிடுகிறது. குடும்பத் தலைவர் ஒருவர் வெளியே புறப்படுகிறார். அந்த நேரம் பார்த்து மழை தூறத் தொடங்குகிறது. வெளியே சென்றவர் உள்ளே திரும்பி தமது கையை நீட்டியவுடன் குடை அவரது கையினை அடைந்து விடுகிறது.

அதுபோலவே வெளியிலிருந்து மூட்டை முடிச்சுகளுடன் ஒருவர் வந்து இறங்குகிறார் என்றால் எந்த பரிமாற்றமும் தேவைப்படாமல் அவர்களது கையில் உள்ள பைகள் வாங்கப்பட்டு விடுகின்றன. ஆனால் அறிமுகமில்லாதோரிடையே இப்படி நடைபெற வாய்ப்பில்லை.

மொழியியலாளர் ஜிப், 'மனிதர்கள் தமது தொடர்ச்சியான செயல்பாடுகளில் எவ்வளவு தூரம் சிக்கனமாக வார்த்தைகளைப் பயன்படுத்த இயலுமோ, அந்த அளவுக்கு சிக்கனமாகப் பயன்படுத்துகின்றனர்' என்கிறார்.

அதிகம் பேசினால் வம்பில் மாட்டிக்கொள்வோமோ என்ற எச்சரிக்கை உணர்வும் பேச்சின் நீட்சியைக் குறைக்கின்றன.

இயல்பான நடைமுறைகளில் பயன்படும் மொழிக்கும் அலுவலக ரீதியாகப் பயன்படும் மொழிக்கும் நிரம்ப வேறுபாடுகள் உண்டு. பணியின் பயன்பாட்டுக்கேற்ப மொழியின் பயன்பாடு அமைகிறது. நிறுவனம் ஒன்றில் பார்வையாளராக வரும் ஒருவர்க்கு அடையாள அட்டை தருவது, சுருக்கமான மொழிப் பயன்பாட்டைக் கொண்டதாகவே அமையும். ஆனால் அந்நிறுவனத்தின் அலுவலக விஷயங்களில் மொழிச் சிக்கனம் என்ற பேச்சுக்கே இடமில்லை. தேவையான அளவுக்கு வார்த்தைகள் நிச்சயம் பயன்படுத்தியே பரிமாற்றம் நடைபெறும்.

ஒருவர் தமது மேலாளரிடம் கடன் கேட்டு விண்ணப்பிக்கிறார். அவர் அப்போது முறைப்படி தம்மை விடுநராகவும் மேலாளரைப் பெறுநராகவும் எழுதி தம்மை அறிமுகம் செய்து கொண்டு தமது தேவையினைப் பகிர்கின்றார். மேலாளர் அறிமுகமானவராக இருப்பினும் இந்த நடைமுறையே பின்பற்றப்படும். இதற்கு காரணம் இருக்கிறது.

அந்த அலுவலகத்தில் அவர் பத்தாயிரம் ரூபாய் கடன் பெறுகிறார் என்றால் அந்த மேலாளருக்குப் பதில் வேறு ஒருவர் அப்பணியில் இணையும்போது இந்த பணியாளர் பெற்றுள்ள கடன் தொடர்பான தகவல் அனைத்தும் எழுத்துபூர்வமாகப் பரிமாறப்பட இந்த நடைமுறை உதவியாக இருக்கும்.

அதுபோலவே நிறுவனத்தின் செயல்பாட்டு மொழியிலும் சிக்கனம் கடைப்பிடிக்கப்படுவதில்லை. ஒவ்வொரு நாளும் அந்த நிறுவனம் எடுத்த முடிவுகள் எத்தனை? அம்முடிவுகளில் எட்டியது எத்தனை? எட்டவேண்டியது எத்தனை? ஒரு திட்டம் குறித்து அந்த நிறுவனம் வைத்திருக்கும் நோக்கங்கள் யாவை? அதனை அடைய அந்நிறுவனம் வைத்திருக்கும் வழிமுறை என்ன?

இது போன்ற அலுவலகம் சார்ந்த நடைமுறைகளில் வார்த்தை சிக்கனம் என்ற பேச்சுக்கே இடமில்லை. எவ்வளவுக்கெவ்வளவு விரிவாக பகிரப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அடுத்தடுத்த படிநிலையிலுள்ளோர்க்கு புரிதல் மேம்பட்டு பணிகள் சிறக்கும்.

இன்றைய மின்னணுப் பயன்பாடு மொழிச்சிக்கனத்தோடு நேரச்சிக்கனத்தையும் கையாள உதவுகிறது. ஒரு நிறுவனம் ஒரு திட்டம் தொடர்பாக நிரந்தரமாக வைத்திருக்கவேண்டிய ஆவணம் விரிவான மொழியில் இருக்கும். ஆனால், அத்திட்டத்தின் நடைமுறை குறித்த புரிதலுள்ளோரிடம் மிகவும் குறைவான வார்த்தைகளில் திட்டச் செயலாக்கம் குறித்த பரிமாற்றத்தினை நிகழ்த்திட இயலும்.

வாட்ஸ்ஆப் போன்ற செயலிகள் இது போன்ற பரிமாற்றங்களுக்கு பெருமளவில் பயன்படுகின்றன. வாட்ஸ்ஆப் குழுவில் உறுப்பினராக உள்ளவர்கள் தமது திட்டம் தொடர்பான முன்னேற்றங்களையோ பின்னடைவுகளையோ உடனுக்குடன் பகிர்ந்து கொள்கின்றனர்.

இக்குழுவில் உறுப்பினராக உள்ள மேலாண்மைப் பொறுப்பிலுள்ளோருக்கும் உடனுக்குடன் தகவல் பரிமாற்றம் நிகழ்ந்து, தான் தலையிட வேண்டிய விஷயங்களை அறிந்து தலையிட அவருக்கு இது உதவியாக உள்ளது. மேலும் மணிக்கணக்கில் கூட்டம் நடத்தி திட்டத்தினை மீளாய்வு செய்யும் நேரத்தையும் சேமிக்க உதவுகிறது.

இன்றைய காலகட்டத்தில் கூட்டங்களை நேரடியாக நடத்தி பொருட்செலவு செய்துதான் நிறுவனங்களின் செயல்திட்டங்களை உருவாக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. மாறாக அந்த திட்டம் தொடர்பாக உருவாகவேண்டிய ஆவணத்தின் குறிப்புச் சட்டகத்தை உருவாக்கிவிட்டால் போதும். அதிலுள்ள ஒவ்வொரு கூறு தொடர்பாகவும் குழுவிலிருப்போரில் வாய்ப்பும் விருப்பமும் இருப்போர் தமது கருத்துகளை எழுத்துபூர்வமாக பகிரலாம்.

இதனை பின்னர் தொகுத்து இணையவழியிலோ நேரிலோ கூட்டம் ஒன்றினை நடத்தினால் போதுமானது திட்டம் தொடர்பான ஆவணம் தயாராகிவிடும். இவ்வாறு மீதமாகும் நேரத்தை பணியாளர்கள் தம் உடனுள்ளோருடன் இணக்கமாகச் செலவிட முன்வரவேண்டும்.

தற்போது வழக்கொழிந்துவிட்ட, குடும்பத்திலிருப்போருடனும் நண்பர்களுடனும் அளவளாவும் வழக்கத்தை மீட்டெடுக்கவேண்டும். இந்த இடத்தில் மொழிச் சிக்கனம் என்ற பேச்சுக்கே இடம் இருக்கக் கூடாது. கூடுமானவரை அன்பைக் கலந்து உறவாடி மகிழவேண்டும்.

ஒவ்வொருவரிடமும் உள்ள நேர்மறை குணங்களைப் பாராட்டி மகிழவேண்டும். இது பாராட்டப்படுவோரின் செயல்திறனைக் கூட்டும். எவ்வளவு நேரம் உறவாடுகிறோம் என்பதைவிட எவ்வளவு நேர்த்தியாக உறவாடுகிறோம் என்பதே முக்கியமானது.

# இமானுவேல் சேகரன் நினைவிடத்தில் அரசியல் கட்சியினர் அஞ்சலி

**பரமக்குடி, செப். 11:** இமானுவேல் சேகரனின் 66-ஆவது நினைவு தினத்தையொட்டி, ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் மாநில அமைச்சர்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள், பல்வேறு அரசியல் கட்சியினர், சமுதாயத் தலைவர்கள் திங்கள்கிழமை மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

பரமக்குடியில் உள்ள இமானுவேல் சேகரன் நினைவிடத்தில் அவரது குடும்பத்தின் சார்பில், மகள் சுந்தரி பிரபா ராணி, பேரன்கள் ஆரோக்கிய கோமகன், சந்திரசேகர், சக்கரவர்த்தி ஆகியோர் காலை 7.30 மணிக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

பின்னர், அவரது பிறந்த ஊரான செல்லூர் சார்பில், ஊராட்சி மன்றத் தலைவி மகேஸ்வரி ஜீவன், கிராமத் தலைவர் சங்கரபாண்டியன் தலைமையில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தப்பட்டது. தேவேந்திரர் பண்பாட்டுக் கழகம் சார்பில் அதன் தலைவர் பரம்பை பாலா, செயலர் புண்ணியமூர்த்தி ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.



பரமக்குடியில் இமானுவேல் சேகரன் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், திமுகவினர்.

**ஜார்க்கண்ட் ஆளுநர்:** இமானுவேல் சேகரன் நினைவிடத்தில் ஜார்க்கண்ட் மாநில ஆளுநர் சி.பி. ராதாகிருஷ்ணன் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

**அரசியல் கட்சியினர்:** திமுக சார்பில் மாநில விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் அமைச்சர்கள் கே.ஆர். பெரியகருப்பன், பி. மூர்த்தி, ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், கயல்விழி, சட்டப்பேரவை உறுப்பினர்கள் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம், செ.முருகேசன், தமிழரசி, முன்னாள் அமைச்சர் எஸ். சுந்தரராஜ், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் உ. திசைவீரன், சுப.த. திவாகர், சேங்கை மாறன் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

பின்னர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறியதாவது:

இமானுவேல் சேகரனுக்கு மணிமண்டபம் அமைக்க வேண்டும் என அவரது குடும்பத்தினர் முதல்வரை நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்தனர். இந்தக் கோரிக்கையை ஏற்று முதல்வர் ரூ. 3 கோடியில் அவரது உருவச்சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்க உத்தரவிட்டார்.

இமானுவேல் சேகரனார் சமூக நீதியை காக்க போராடி உயிர் நீத்தார். அவரது எண்ணம் நிறைவேறும் வகையில், சமூகநீதியைக் காப்போம் என்றார் அவர்.

இதையடுத்து, அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சர்கள் ஆர்.பி.உதயகுமார், ராஜலட்சுமி, எம். மணிகண்டன், அ.அன்வர்ராஜா, முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் சதன்பிரபாகர், எஸ்.முத்தையா, மாவட்டச் செயலர் எம்.ஏ. முனியசாமி உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

காங்கிரஸ் சார்பில் கட்சியின் இளைஞரணி மாநிலச் செயலரும், சட்டப்பேரவை உறுப்பினருமான செல்வப்பெருந்தகை, முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் மலேசியா பாண்டியன் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

மதிமுக சார்பில் சட்டப்பேரவை உறுப்பினர் சதன் திருமலைக் குமார், மாவட்டச் செயலர் வி.கே. சுரேஷ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் மாவட்டச் செயலர்கள் பிரபாகரன், அற்புதக்குமார், மாநில துணைப் பொதுச் செயலர்கள் கலைவேந்தன், கனிவேந்தன், பாஜக சார்பில் சட்டப்பேரவை உறுப்பினர் நயினார்நாகேந்திரன், கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலை, பொதுச் செயலர்கள் கருப்பு முருகானந்தம், பொன்.பாலகணபதி, மாவட்டத் தலைவர் தரணி முருகேசன், தேமுதிக சார்பில் அக்கட்சியின் மாவட்டச் செயலர் சிங்கை ஜின்னா, பாமக சார்பில் அக்கட்சியின் மாநில பொதுச் செயலர் வடிவேல் ராவணன், மாநிலப் பொருளாளர் திலகபாமா, மாவட்டச் செயலர் தவ.அஜித், நாம் தமிழர் கட்சி சார்பில் மாவட்டச் செயலர் காமராஜ், அதிமுக ஓபிஎஸ் அணி சார்பில் மாநிலங்களவை உறுப்பினர் ஆர்.தர்மர், அமமுக சார்பில் அக்கட்சியின் பொதுச் செயலர் டி.டி.வி. தினகரன், மக்கள் விடுதலை கட்சி சார்பில் அதன் தலைவர் முருகவேல் ராஜன், தாய் தமிழர் கட்சி நிறுவனர் பி.எம். பாண்டியன் உள்ளிட்டோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

## பரமக்குடியில் மணிமண்டபம்: முதல்வர் அறிவிப்பு

**சென்னை, செப். 11:** தியாகி இமானுவேல் சேகரனாருக்கு சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

அவர் திங்கள்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

தியாகி இமானுவேல் சேகரனாருக்கு சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்க வேண்டும் என்பது பல்வேறு தரப்பினரின் கோரிக்கையாக உள்ளது. குறிப்பாக, தேவேந்திர குல வேளாளர் கல்வியாளர் குழு, தேவேந்திரர் பண்பாட்டுக் கழகம், இமானுவேல் சேகரனாரின் மகள் சுந்தரி பிரபா ராணி, பேரன் சக்கரவர்த்தி ஆகியோர் என்னைச் சந்தித்து நேரில் வலியுறுத்தினர்.

அனைத்துத் தரப்பினரின் கோரிக்கையை ஏற்று, இமானுவேல் சேகரனார், நல்லடக்கம் செய்யப்பட்ட ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் சிலையுடன் கூடிய மணிமண்டபம் ரூ.3 கோடி செலவில் கட்டப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

இமானுவேல் சேகரனார், சிவகங்கை மாவட்டம் முதுகுளத்தூர் வட்டம் செல்லூரில் கடந்த 1924-ஆம் ஆண்டு அக்டோபர் 9-இல் பிறந்தார்.

ஆங்கிலேயர்களுக்கு எதிராக வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் கலந்து கொண்டு சிறைவாசம் சென்றார். மேலும், ஒடுக்கப்பட்டோர் விடுதலைக்காகவும் போராடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அழி(றி)வுப் பாதை...

பள்ளிகளில் அறிதிறன்பேசி (ஸ்மார்ட்ஃபோன்) பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கலாம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் 'யுனெஸ்கோ' பரிந்துரைத்துள்ளது. கல்வியில் தொழில்நுட்பத்தின் பயன்பாடு தொடர்பான ஆய்வறிக்கையை யுனெஸ்கோ அண்மையில் வெளியிட்டுள்ளது. 'கல்விக்கு எண்ம (டிஜிட்டல்) தொழில்நுட்பம் உதவுகிறது என்பதற்கு வலுவான ஆதாரங்கள் இல்லை. அறிதிறன்பேசி உற்பத்தியாளர்கள்தான் கல்விக்கு எண்ம தொழில்நுட்பம் உதவுகிறது என அதிகம் பரப்புரை செய்கின்றனர்' என்று அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

கல்விக்கு எண்ம தொழில்நுட்பம் உதவாத நிலையில், மாணவர்களின் நலன்களுக்கு உகந்ததாக இல்லாத அறிதிறன்பேசிக்கு பள்ளிகளில் தடை விதிக்கலாம் என்று யுனெஸ்கோ பரிந்துரைத்துள்ளது. அறிதிறன்பேசி மாணவர்களின் கல்வியை திசைதிருப்புகிறது என்று 14 நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது. ஆக்கபூர்வ பயன்பாட்டுக்கு மாறாக, எதிர்மறையான விளைவுகளையே அது ஏற்படுத்துகிறது. அப்படியிருந்தும், மிகக் குறைவான பள்ளிகளில் மட்டுமே அறிதிறன்பேசி பயன்பாட்டுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்றதொரு ஆய்வு இந்தியாவிலும் நடத்தப்பட்டது. மத்திய அரசு 21 மாநிலங்களின் கிராமப்புற பகுதிகளில் மாணவர்களின் பெற்றோர்களிடையே ஆய்வு மேற்கொண்டு அந்த ஆய்வு முடிவின் அறிக்கையை கடந்த மாதம் வெளியிட்டுள்ளது. 6 முதல் 16 வயது வரை உள்ள மாணவர்களின் பெற்றோர்களிடம் கருத்து கேட்கப்பட்டது.

கிராமப்புறப் பகுதிகளில் 49.3 சதவீத மாணவர்களிடம் அறிதிறன்பேசி உள்ளது. இவர்களில் 76.7 சதவீத மாணவர்கள் விடியோ கேம் விளையாடவே அறிதிறன்பேசியைப் பயன்படுத்துகின்றனர். 56.6 சதவீதம் பேர் திரைப்படம் பார்க்கவும், 47.3 சதவீதம் பேர் பாடல்கள் கேட்கவும் அறிதிறன்பேசியைப் பயன்படுத்துகின்றனர். 34 சதவீதம் பேர் மட்டுமே படிப்பதற்கான தரவுகளை அதில் பதிவிறக்கம் செய்கின்றனர். 18 சதவீதம் பேர் இணையவழிக் கல்விக்குப் பயன்படுத்துகின்றனர் என்பது இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

மது அருந்துவது, புகை பிடிப்பது, போதைப் பொருள் பயன்படுத்துவது போன்றவற்றுக்கு இளைஞர்கள் அடிமையாவதாக மட்டுமே இதுவரை கருதப்பட்டு வந்தது. ஆனால், இப்போது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பலரும் கைப்பேசிக்கு அடிமையாகிக் கொண்டிருக்கின்றனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. கரோனா காலகட்டத்தில் கைப்பேசிகளைப் பயன்படுத்தி மட்டுமே படிக்க முடியும் என்கிற நிலைமை ஏற்பட்டது. படிப்பதற்காகத் தொடங்கிய மாணவர்களின் அறிதிறன்பேசி பழக்கம், இப்போது இன்றியமையாததாக மட்டுமல்ல, ஒருவித போதையாகவும் மாறியிருக்கிறது.

பள்ளிகளில் இருந்து வீட்டுக்கு வரும் பெரும்பாலான மாணவர்கள், வந்தவுடன் அறிதிறன்பேசியில் மூழ்கிவிடுகின்றனர். அவர்கள் தொலைக்காட்சிகூட பார்ப்பதில்லை. விளையாடச் செல்வதில்லை. அப்படியே விளையாடினாலும் இணைய விளையாட்டுகளில்தான் ஈடுபடுகின்றனர். இரவில் வெகுநேரம் விழித்திருக்கின்றனர். சமூக வலைதளங்களில் பரவிக்கிடக்கும் ஆபாசப் பதிவுகளும் இளம் தலைமுறையை திசைதிருப்புகின்றன.

குழந்தைகளிடமிருந்து கைப்பேசியை பெற்றோர்கள் பறித்தாலோ, விழித்திருந்து பார்ப்பதைத் தடுத்தாலோ கடும் கோபம் கொள்கின்றனர். பெற்றோர் கண்டித்ததால் சில மாணவர்கள் தற்கொலைகூட செய்துகொண்டுள்ளனர்.

அத்தியாவசியமாக இருக்கும் ஒன்று, அளவு மீறும்போது போதையாக மாறுகிறது. காபி, தேநீர் அருந்துவது, புகையிலைப் பழக்கம் போல அறிதிறன்பேசியும் மாறிவருகிறது. அது இல்லாமல் இருக்க முடியாது என்கிற மனநிலையால் கோபம், மன அழுத்தம், கடமை தவறுதல் போன்றவை நிகழ்கின்றன. இதனை 'இன்டர்நெட் அடிக்ஷன் டிஸார்டர்' என்கின்றனர்.

10 முதல் 20 வயது வரையிலானவர்கள் இந்த நோய்க்கு அதிகமாக ஆளாகின்றனர் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மது அருந்துவோருக்கு அதை அருந்தவில்லை என்றால் எப்படி படபடப்பு தோன்றுமோ, அதேபோன்று கைப்பேசியைப் பறித்துவிட்டால் இவர்களுக்கும் படபடப்பு ஏற்படும். மணிக்கணக்காக கைப்பேசியையே பார்த்துக் கொண்டிருப்பதால் பலருக்கும் 10 வயதுக்குள்ளாகவே கண்ணாடி அணியும் நிலை ஏற்படுகிறது. 25–30 வயதுக்குள்ளாகவே பார்வைக் குறைபாடு ஏற்படும் அபாயமும் உள்ளது.

பிறந்து சில மாதங்கள் ஆனவுடனேயே, குழந்தைகள் அழுதால் தாய்மார்கள் கைப்பேசியைக் கொடுத்து அழுகையைக் கட்டுப்படுத்துகிறார்கள். குழந்தைகள் தங்கள் பெற்றோர்களைவிட கைப்பேசியில் அதிக பழக்கம் உடையவர்களாக மாறிவிடுகின்றனர். அவர்களுக்குத் தெரிந்திருக்கும் நுட்பங்கள் பலவும் பெற்றோர்களுக்குத் தெரிவதில்லை. எனவே, அவர்கள் வளரும்போது பெற்றோர்களால் அவர்களைக் கண்காணிக்க முடிவதில்லை; கண்டிக்கவும் முடிவதில்லை.

இந்தியாவில் இப்போது 120 கோடி பேர் கைப்பேசியைப் பயன்படுத்துகின்றனர். அவர்களில் 60 கோடி பேர் அறிதிறன்பேசி பயனாளர்களாக உள்ளனர். இந்த எண்ணிக்கை இன்னும் மூன்று ஆண்டுகளில் 100 கோடியைத் தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கைப்பேசி பயன்பாட்டைத் தடுப்பதோ, ஒழிப்பதோ இனி சாத்தியமில்லாதது.

இந்த போதையில் இருந்து இளம் தலைமுறையைக் காக்க, இதன் சாதகமான அம்சங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் அதே நேரத்தில், பாதகத்திலிருந்து காப்பது எப்படி என்பது குறித்து அனைவரும் இணைந்து சிந்திக்க வேண்டிய தருணமிது. இணையம் என்பது அறிவுச் சுரங்கத்தின் திறவுகோலாக மட்டும் அல்லாமல், அழிவுப் பாதைக்கும் இட்டுச் செல்கிறது என்பதை நாம் உணர வேண்டும்.

EVA STALIN IAS ACADEMY